

பாடம் 1

டிசம்பர் 28-ஜனவரி 3

# வாசிப்பிலிருந்து புரிந்துகொள்ளுதலுக்கு

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *லூக்கா 24:25-27; 2பேதுரு 3:11-13; யோனா 3:3-10; எண்ணாகமம் 14:34; தானியேல் 9:23; 10:11,12.*

**மனன வசனம்:** அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய்ச்சேர்ந்து, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அப்போஸ்தலர் 8:30.

தானியேல் புத்தகத்திலிருந்து பிறந்தது நம் திருச்சபை. இந்தக் காலாண்டின் நம் ஆராய்ச்சி புத்தகம் அதுதான். பின்வரும் கருத்துகள் இந்த ஆராய்ச்சி முழுவதிலும் உதவியாக இருக்கும்.

**முதலாவது, கிறிஸ்துவே தானியேல் புத்தகத்தின் மையம்;** வேதா கமத்தின் மையம் அவர்தாமே.

**இரண்டாவது,** இலக்கிய ஒழுங்குமுறையுடன் தானியேல் எழுதப் பட்டுள்ளது; அப்புத்தகம் வலியுறுத்துகிற கருத்தைப் புரிந்துகொள்ள அது உதவுகிறது.

**மூன்றாவது,** பொதுவான தீர்க்கதரிசனங்களுக்கும் காலம் சம்பந் தப்பட்ட தீர்க்கதரிசனங்களுக்குமுள்ள வித்தியாசம் தெரிந்தால்தான் தானியேல் தீர்க்கதரிசனங்கலுக்கும் ஏசாயா, ஆமோஸ், எரேமியா போன்றோரின் தீர்க்கதரிசனங்களுக்கும் உள்ள வித்தியாசம் புரியும்.

**நான்காவது,** தானியேலின் காலம் சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங் கள் நீண்ட காலக்கட்டங்களை உள்ளடக்கியவை; வருடம்-நாள் நிய தியை வைத்து கணக்கிடவேண்டும்.

**ஐந்தாவது,** தானியேல் புத்தகமானது தீர்க்கதரிசன தகவலை மட் டும் வெளிப்படுத்தவில்லை; இன்றைய நம் தனிப்பட்ட வாழ்விற்கான செய்திகளையும் சொல்கிறது.

*2020, ஜனவரி 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

**ஞாயிறு** டிசம்பர் 29

# கிறிஸ்து: தானியேலின் மையம்

**கேள்வி: கிறிஸ்துதான் வேதாகமத்தின் மையம் என்பதை எவ்வாறு சொல்வீர்கள்? லூக்கா 24:25-27; யோவான் 5:39; 2கொரிந்தியர் 1:19,20.**

தானியேல் புத்தகத்தின் மையயும் இயேசுதாம்.

**தானியேல் 1:** அந்தகார வல்லமைகளை எதிர்கொள்ள பரலோகத்தைவிட்டு வந்த கிறிஸ்துவின் அனுபவமே தானியேலின் அனுபவமும். பாபிலோனியக் கலாச்சார சவால்களைச் சந்திக்க தானியேலுக்கும் நண்பர்களுக்கும் கிறிஸ்துவின் ஞானம் அருளப்பட்டிருந்தது.

**தானியேல் 2:** உலக ராஜ்யங்களை எல்லாம் நொறுக்கின முடிவுகாலக் கல் கிறிஸ்துவின் ராஜ்யமே.

**தானியேல் 3:** கிறிஸ்து தம் உண்மை ஊழியர்களுடன் அக்கினிச் சூளையில் நடந்ததாகச் சொல்கிறது.

**தானியேல் 4:** 'பரலோகம் அரசாளுகிறது' என்பதை நேபுகாத்நேச்சார் புரிந்துகொள்ளும்படி ராஜ்யபாரம் அவனை விட்டு சிலகாலம் நீக்கப்பட்டது. தானி 4:26. கர்த்தத்துவத்தையும் ராஜரீகத்தையும் பெறுகிற 'மனுஷகுமாரனாகிய' கிறிஸ்துவை நினைவுபடுத்து கிறது. தானி 7:13.

**தானியேல் 5:** பெல்ஷாத்சார் ராஜா கொல்லப்பட்டு, பெர்சியர்களிடம் பாபிலோன் விழுந்தது. சாத்தானின் தோல்விக்கும், கடைசிக்கால பாபிலோனை கிறிஸ்து அழிந்துபோடுவதற்கும் இது முன்னடையாளம்.

**தானியேல் 6:** தானியேலுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டப்பட்டதுபோல இயேசுவுக்கு எதிராக பிரதான ஆசாரியர்கள் பொய்க்குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கல். தானியேலைத் தப்புவிக்க தரியு ராஜா முயன்றும் முடியவில்லை. இயேசுவைத் தப்புவிக்க பிலாத்து முயன்றும் முடியவில்லை. மத்தேயு 27:17-24.

**தானியேல் 7:** மனுஷகுமாரனாகிய கிறிஸ்து தம் ராஜ்யத்தைப் பெற்று, தம் மக்கள்மேல் அரசாளுவார்.

**தானியேல் 8:** பரலோகப் பரிசுத்தஸ்தலத்தின் பிரதான ஆசாரியர் இயேசுவே.

**தானியேல் 9:** தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து, தம் மரணத்தின்மூலம் தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையே உடன்படிக்கையை மீண்டும் உறுதிப்படுத்தியவர் கிறிஸ்துவே.

**தானியேல் 10-12:** கிறிஸ்துவே பிரதான தளபதியான மிகாவேல். அவர் தீமையின் படைகளுக்கு எதிராகப் போரிட்டு, மரணத்தின் அதிகாரத்திலிருந்து தேவ மக்களை விடுவிப்பார்.

எனவே, தானியேலின் மையம் கிறிஸ்துதான். அதன் ஒவ்வொரு அதிகாரத்திலும் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிற ஏதாவது அனுபவம் அல்லது கருத்து உள்ளது.

துன்பங்கள், பாடுகள் மத்தியிலும் அல்லது பெரும் சந்தோஷமும் செழிப்புமான நேரங்களிலும் கிறிஸ்துவையே நம் வாழ்வின் மையமாக வைத்திருக்க என்ன செய்யலாம்? அது ஏன் முக்கியமானது?

# தானியேல் புத்தக அமைப்பு

தானியேலின் சில பகுதிகள் எபிரெய மொழியிலும், வேறு சில பகுதிகள் அரமெய்க் மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. அரமெய்க் மொழியில் உள்ள 2-7 அதிகாரங்களின் அமைப்பு, அந்தப் பகுதியின், தானியேல் புத்தகத்தின் முக்கியச் செய்தியை வலியுறுத்துகிறது:

1) நான்கு ராஜ்யங்கள்பற்றி நேபுக்நேச்சார் கண்ட தரிசனம் — தானியேல் 2
2) அக்கினிசூளையிலிருந்து நண்பர்கள் விடுதலை — தானியேல் 3
3) நேபுகாத்நேச்சாருக்கு நியாயத்தீர்ப்பு — தானியேல் 4
3) பெல்ஷாத்சாருக்கு நியாயத்தீர்ப்பு — தானியேல் 5
2) சிங்கக்கெபியிலிருந்து தானியேல் விடுதலை — தானியேல் 6
1) நான்கு ராஜ்யங்கள்பற்றி தானியேல் கண்ட தரிசனம் — தானியேல் 7

முக்கியக்கருத்தை மையத்தில் வைப்பதற்கு இத்தகைய இலக்கிய அமைப்பு உதவுகிறது. இங்கே நடுக் கருத்து முக்கியமானது. தானி 4;5. நேபுகாத்நேச்சாரிடமிருந்து தற்காலிகமாகவும், பெல்ஷாத்சாரிட மிருந்தும் நிரந்தரமாகவும் தேவன் ராஜ்யபாரத்தை நீக்குகிறார். எனவே பூமியின் ராஜாக்களை பதவியில் அமர்த்தவும், பதவியிலிருந்து அகற றவும் தேவன் அதிகாரமுள்ளவரென 2-7 அதிகாரங்கள் சொல்கின்றன.

ஒரு கருத்தை வலியுறுத்துவதற்கு அதை மீண்டும்மீண்டும் சொல்வது ஒரு வழி. எகிப்தின் எதிர்காலம் குறித்து இரண்டு கனவுகளை பார்வோனுக்கு தேவன் கொடுத்தார். ஆதி 41:1-7. முதல் கனவில் அவலட்சணமான ஏழு பசுக்கள் புஷ்டியான ஏழு பசுக்களைப் பட்சித்தன. இரண்டாவது கனவில், செழுமையான ஏழு கதிர்கள் சாவியான ஏழு கதிர்களை விழுங்கின. இரு கனவுகளும் ஒரே கருத்தை வலியுறுத்தின. ஏழு வருடம் செழிப்பு; ஏழு வருடம் பஞ்சம்.

தானியேல் புத்தகத்திலும் இதே பாணி உள்ளது. ஒரு முக்கிய விஷயத்தை மீண்டும்மீண்டும் வலியுறுத்துகிற நான்கு தீர்க்கதரிசனங்கள் உள்ளன. தேவனே ராஜாதி ராஜா என்பதே கருத்து. ஒவ்வொரு தீர்க்கதரிசனத்தின் கண்ணோட்டம் தனித்துவமாக இருந்தாலும், ஒரே காலக்கட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றன; தீர்க்கதரிசியின் காலம்முதல் முடிவுகாலம்வரைக்குமான தீர்க்கதரிசனங்கள் அவை.

| தானியேல் 2 | தானியேல் 7 | தானியேல் 8,9 | தானியேல் 10-12 |
|---|---|---|---|
| பாபிலோன் | பாபிலோன் | | |
| மேதிய-பெர்சியா | மேதிய-பெர்சியா | மேதிய-பெர்சியா | மேதிய-பெர்சியா |
| கிரேக்கம் | கிரேக்கம் | கிரேக்கம் | கிரேக்கம் |
| ரோம் | ரோம் | ரோம் | ரோம் |
| தேவராஜ்யம் ஸ்தாபிக்கப் படுகிறது | பரலோக நியாயத் தீர்ப்புக்குப்பின் புதிய பூமி | பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படு கிறது | மிகாவேல் எழும்பு கிறார் |

நம் நீண்டகால எதிர்பார்ப்புகள் குறித்து பின்வரும் வசனங்கள் தருகிற மிகப்பெரிய நம்பிக்கை என்ன? தானி 2:44; சங் 9:7–12; 2பேதுரு 3:11–13.

# தானியேலில் அடையாளத் தீர்க்கதரிசனங்கள்

தானியேலின் தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டின் பிற தீர்க்க தரிசிகளிலிருந்து வேறுபடுபவை. தானியேல் தீர்க்கதரிசனங்கள் அடையாளத் தீர்க்கதரிசனங்கள்; ஆனால், பெரும்பாலான பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் பொதுத் தீர்க்கதரிசனங்கள். வேதாகமத் தீர்க்கதரிசனம்பற்றி சரியாகப் புரிந்துகொள்ள இந்த இருவகை தீர்க்க தரிசனம்குறித்து அறிந்திருப்பது அவசியம். பொது தீர்க்கதரிசனங் களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிற விசேஷித்த அம்சங்கள் கடைசிக் கால அடையாளத் தீர்க்கதரிசனங்களில் உண்டு:

**தரிசனங்கள், சொப்பனங்கள்:** அடையாளத் தீர்க்கதரிசனத்தில் கனவு, தரிசனம்மூலம் தீர்க்கதரிசியிடம் தேவன் செய்திசொல்வார். பொதுத் தீர்க்கதரிசனத்தில் 'கர்த்தருடைய வசனத்தை' (தரிசனங்களும் அடங் கும்) தீர்க்கதரிசி பெறுவார். பொதுத் தீர்க்கதரிசனங்களில் கர்த்தருடைய வசனம் என்கிற சொற்கள் 1600 தடவைக்குமேல் வருகின்றன.

**பலவகை அடையாளங்கள்:** பொதுத் தீர்க்கதரிசனங்களில் அடையாளங் கள் குறைவாக இருக்கும். அடையாளத் தீர்க்கதரிசனத்தில், நிஜ உல கிற்கு அப்பாற்பட்ட அடையாளங்களை தேவன் காண்பிப்பார்; அசாதாரண மிருங்கள், கொம்புகள் போன்றவை அதில் அடங்கும்.

**தேவனுடைய அதிகாரமும் நிபந்தனையற்ற தன்மையும்:** இஸ்ரவேலருடன் தேவன் செய்துள்ள உடன்படிக்கைக்கு மனிதர்கள் இணங்குவதைப் பொறுத்து, பொதுத் தீர்க்க தரிசனங்கள் நிறைவேறுகின்றன. ஆனால், அடையாளத் தீர்க்கதரிசனஙகள் நிபந்தனையற்றவை. அந்தத் தீர்க்க தரிசனத்தில் தானியேலின் காலம்முதல் முடிவுகாலம் மட்டுமுள்ள உலக ராஜ்யங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் தேவன் வெளிப்படுத்து கிறார். இந்தத் தீர்க்கதரிசனம் தேவனுடைய அதிகாரத்தையும் முன்னறி வையும் வைத்து நிறைவேறும்; மனிதர்களுடைய தீர்மானங்களுக்கு அப்பாற்பட்டது.

**கேள்வி: யோனா 3:3-10இல் உள்ளது பொதுத் தீர்க்கதரிசனமா, அடையாளத் தீர்க்க தரிசனமா? தானியேல் 7:6 என்ன தீர்க்கதரிசனம்?**

பொதுத் தீர்க்கதரிசனம், அடையாளத் தீர்க்கதரிசனம்பற்றி அறிந் திருப்பது நல்லது. முதலாவது, தீர்க்கதரிசன உண்மையைச் சொல்ல தேவன் வெவ்வேறு அணுகுமுறைகளைக் கையாள்வதை இது காட்டு கிறது. எபி 1:1. இரண்டாவது, வேதாகமத்தின் அழகையும் சிக்கலையும் புரிந்து, போற்ற இது உதவுகிறது. மூன்றாவது, 'சத்திய வசனத்தை' உள்ளபடி போதிக்க இந்த அறிவு உதவுகிறது. 2தீமோ 2:15.

ஓசியா 3:4,5; ஆமோஸ் 8:11; சகரியா 9:1; 14:4 போன்ற வசனங்களைக் காட்டி, உலக வரலாற்றின் இறுதி நிகழ்வுகள் மத்திய கிழக்கில்தான் நடைபெறப்போவதாக சில கிறிஸ் தவர்கள் நம்புகிறார்கள். இவ்வாறு விளக்கம் சொல்வதிலுள்ள தவறு என்ன? காலம் சம்பந் தப்பட்ட தீர்க்கதரிசனங்களுக்கும் பொதுத் தீர்க்கதரிசனங்களுக்கும் இடையேயுள்ள வித்தி யாசம் புரிந்திருப்பது இதற்கு எவ்வாறு தீர்வாக இருக்கும்?

# தேவனுடைய கால அளவு

அடையாளத் தீர்க்கதரிசனங்களை வரலாற்று அணுகுமுறையுடன் ஆராயவேண்டும். இந்த அணுகுமுறையை முக்காலவியல் என்பார்கள். முற்காலவியலும் பிற்காலவியலும் கருத்தியலும் இதற்கு எதிரானவை. இவற்றுடன் ஒப்பிட்டுப் படித்தால் முக்காலவியல் தெளிவான புரிதல் கிடைக்கும்.

அடையாளத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிவிட்டதாக முற்காலவியல் சொல்கிறது. இவற்றில் சில தீர்க்கதரிசனங்கள் இனி நிறைவேறுமென பிற்காலவியல் சொல்கிறது. 'அடையாளத் தீர்க்கதரிசனங்கள் பொதுவான ஆவிக்குரிய நிஜங்களையே சுட்டிக்காட்டுகின்றன; அவற்றுக்கும் வரலாற்றுக்கும் தொடர்பில்லை' என்கிறது கருத்தியல்.

ஆனால் முக்காலவியலானது, தீர்க்கதரிசியின் காலம்முதல் முடிவு காலம்வரைக்குமான வரலாற்று நிகழ்வுகளை அடையாளத் தீர்க்கதரிசனத்தில் தேவன் கோர்வையாக வெளிப்படுத்துவதாகச் சொல்கிறது. தானியேல் புத்தகத்தின் முக்கியத் தீர்க்கதரிசனங்கள் இந்த வரலாற்று நிகழ்வை வெவ்வேறு கோணங்களில், புதிய விளக்கத்துடன் சொல்கின்றன. எலன் ஒய்ட் உட்பட அட்வென்டிஸ்ட் முன்னோடிகள் வரலாற்று பின்னணியில் வேதாகமத் தீர்க்கதரிசனங்களைப் புரிந்திருந்தார்கள்.

**கேள்வி: தீர்க்கதரிசனத்தில் ஒரு 'நாள்' என்றால் என்ன? எண் 14:34; எசே 4:5,6.**

---

வருடம்-நாள் நியதியை வைத்து தீர்க்கதரிசன காலங்கள் கணிக்கப்படுகின்றன. தீர்க்கதரிசனத்தில் ஒரு நாள் என்பது வரலாற்றில் ஒரு வருடமாகும். உதாரணமாக, 2300 இராப்பகல் தீர்க்கதரிசனமானது 2300 வருடங்களைச் சுட்டிக்காட்டுகிறது. தானி 8:14. அதுபோல, 70 வாரத் தீர்க்கதரிசனமானது 490 வருடங்களைச் சுட்டிக்காட்டுகிறது. தானி 9:24-27.

**கால அளவை இப்படிக் கணக்கிடுவதற்குக் காரணங்கள் உள்ளன.**

1. தரிசனங்கள் அடையாளமாக இருப்பதுபோல, அதிலுள்ள காலங்களும் அடையாளங்களாக இருக்கவேண்டும்.
2. அந்தத் தரிசனங்களின் நிகழ்வுகள் நீண்டகால இடைவெளிகளில் நிகழ்வதால், அவ்வாறுதான் விளக்கம் காணவேண்டும்.
3. வருடம்-நாள் நியதியை தானியேல் புத்தகம் உறுதிப்படுத்துகிறது. 70 வாரத் தீர்க்கதரிசனம் இதற்கு சரியான உதாரணம்; அர்தசஷ்டாவின் காலம்முதல் இயேசு மேசியாவாக வருகிற காலம்வரைக்கும் அந்தத் தீர்க்கதரிசனம் செல்கிறது. எனவே, தானியேல் புத்தகத்தின் காலத் தீர்க்கதரிசனங்களை வருடம்-நாள் நியதியின்படி அர்த்தங்காண்பதுதான் அவற்றைத்தெளிவாகவும் சரியாகவும் புரிந்துகொள்வதற்கான வழி.

---

இந்தத் தீர்க்கதரிசனங்களில் சில நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வருடங்களைக் குறிக்கின்றன. பொறுமைபற்றி இதிலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?

# தானியேலின் இன்றைய பொருத்தம்

தானியேல் புத்தகம் 2500 வருடங்களுக்குமுன் எழுதப்பட்டாலும், 21ம் நூற்றாண்டு தேவபிள்ளைகளுக்கும் பொருந்தக்கூடியது. இதற்கு மூன்று விஷயங்களைக் காரணமாகச் சொல்லலாம்.

**தேவனுடைய கட்டுப்பாட்டில் நம் வாழ்க்கை இருக்கிறது.** என்ன தீமை நேர்ந்தாலும், எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. மனிதர்களுடைய எதிர்பாராச் செயல்களையும் தம் பிள்ளைகளுக்கு நன்மையாக முடியப் பண்ணுகிறார். பாபிலோனில் தானியேலைப்போல எகிப்தில் யோசேப்பும் பெர்சியாவில் எஸ்தரும் இருந்தார்கள். இந்த மூவரும் இளம் பிராயத்தில் அந்நிய தேசங்களுக்கு கைதிகளாகச் சென்றார்கள், அஞ்ஞான தேசங்களின் பிடியில் இருந்தார்கள். பெலவீனர்கள், தேவன் கைவிட்டவர்கள் என்று மனிதர்கள் நினைக்கலாம். ஆனால் தேவன் அவர்களைப் பெலப்படுத்தி, வல்லமையாகப் பயன்படுத்தினார். பாடுகளும் துன்பங்களும் எதிர்ப்பும் வரும்போது, தானியேலுக்கும் யோசேப்புக்கும் எஸ்தருக்கும் தேவன் செய்ததை நினைப்போமாக. தேவன் எப்போதும் நம் தேவன்தாம்; பாடுகளுக்கு மத்தியிலும் நம்மைக் கைவிடமாட்டார்.

**வரலாறு தேவனுடைய கையில் இருக்கிறது.** பாவமும் வன்முறையும் நிறைந்த உலகம் நம்மைக் கலங்கச்செய்யலாம். ஆனால், எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது, தேவன் சொல்கிறபடி வரலாறு செல்வதை தானியேலின் ஒவ்வோர் அதிகாரமும் சொல்கிறது. எலன் ஒய்ட் இவ்வாறு சொல்கிறார்: ''உலக வரலாற்றுப் பதிவுகளில் தேசங்களின் வளர்ச்சியும், சாம்ராஜ்யங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் மனிதர்களுடைய பலத்தினாலும் சித்தத்தினாலும் நிகழ்ந்ததுபோலத் தெரியலாம். அவனுடைய பலத்தால், ஆசையால் அல்லது சபலத்தால் பெரும்பாலும் நிகழ்ச்சிகள் அரங்கேறியதுபோலத் தோன்றலாம். ஆனால் தேவவார்த்தை திரைவிலக்குகிறது; மனித விருப்பங்களும் பலமும் உணர்ச்சிகளும் ஆடிய ஆடு-புலி ஆட்டம் முழுவதிலும் சர்வவல்லவரின் ஏது கரங்கள் அவருடைய சித்தத்தின் ஆலோசனைகளை அமைதியாக, பொறுமையாக நிறைவேற்றினதைக் காணமுடிகிறது.'' - *Edu,* பக். 173.

**தம் கடைசிக்கால மக்களுக்கு தேவன் ஒரு முன்மாதிரியை வைத்திருக்கிறார்.** வேதாகமத்திற்கு எதிரான கருத்துகளைக் கொண்ட ஒரு சமுதாயத்தில் எவ்வாறு வாழவேண்டும் என்பதற்கு தானியேலும் அவருடைய நண்பர்களும் முன்மாதிரிகளாக இருந்தார்கள். விசுவாசத்தை விலைபேசவும், தேவன் மேலிருந்த அர்ப்பணிப்பை அகற்றும் பாபிலோனிய முறைகளுக்கு இணங்கவும் அழுத்தம் ஏற்பட்டபோது வேதவசனத்திற்கு உண்மையுடன் இருந்தார்கள். எதிர்ப்பும் சுவிசேஷத்தின் நிமித்தம் உபத்திரவமும் உண்டாகும்போது, அவர்களுடைய முன்மாதிரி நம்மை ஊக்கப்படுத்துகிறது. நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் உழைத்தாலும்கூட தேவன்மேல் அர்ப்பணிப்போடு வாழலாமென தானியேல் புத்தகம் காட்டுகிறது.

நம் தனிப்பட்ட போராட்டங்களில் தேவன் அக்கறைகாட்டுவது பற்றி தானி **9:23; 10:11,12;** மத் **10:29–31** வசனங்கள் சொல்வது என்ன?

## மேலும் படிக்க:

“தங்களுடைய சிருஷ்டிகரின் சித்தத்தை அறிந்துகொள்ள விரும்புகிற அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக வேதாகமம் கொடுக்கப்பட்டது. தீர்க்கதரிசனத்தின் நிச்சயமான வார்த்தைகளை தேவன்தாமே மனிதர்களுக்குக் கொடுத்தார். சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை தானியேல், யோவான் போன்றோருக்கு வெளிப்படுத்துவதற்கு தேவதூதர்கள் வந்தார்கள்; கிறிஸ்துவும் தாமே இறங்கி வந்தார். நம் இரட்சிப்போடு சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயங்கள் ஏதோ மறை பொருள்போலச் சொல்லப்படவில்லை. மெய்யுள்ளத்தோடு சத்தியத்தைத் தேடுகிறவர்களைக் குழப்பி, வழிவிலக்கும்விதத்தில் அவை வெளிப்படுத்தப்படவில்லை. ஆபகூக் தீர்க்கதரிசியின்மூலம் ஆண்டவர் இப்படிச் சொன்னார்: ‘நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளில் தீர்க்கமாக வரை.’ ஆபகூக் 2:2. ஜெபசிந்தையோடு தேவவார்த்தையை ஆராயும் யாவருக்கும் அது தெளிவாக விளங்கும். ‘நீதிமானுக்காக வெளிச்சம் விதைக்கப்பட்டிருக்கிறது.’ சங் 97:11. மறைந்துள்ள பொக்கிஷத்தைத் தேடுவதுபோல ஆர்வத்துடன் சத்தியத்தைத் தேடாத ஒருவரை, எந்தச் சபையாலும் பரிசுத்தத்தில் முன்னேற்றமுடியாது.”– *GC, p 521,522.*

“தானியேல் மற்றும் அவருடைய நண்பர்களின் வரலாற்றைப் படியுங்கள். தாங்கள் வாழ்ந்த இடத்தில் எல்லாப்பக்கங்களிலிருந்தும் சிற்றின்பச் சோதனையால் நெருக்கப்பட்டாலும், அனுதின வாழ்வில் தேவனைக் கனப்படுத்தி, மகிமைப்படுத்தினார்கள். எதிரியின் பாதையில் நிற்க, தங்களை அனுமதிக்கவில்லை. அவர்களுடைய உறுதியான மெய்ப்பற்றுக்கு நிறைவான ஆசீர்வாதங்களை தேவன் பிரதிபலனாகக் கொடுத்தார்.”– *MR [No. 224], p 169,170.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *தானியேல் புத்தகம் ஒரு முக்கியக் கருத்தை வலியுறுத்துகிறது. எல்லாத் தேசங்களும் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருப்பது ஒருபுறம்; ஆனால், அவர் நம் ஒவ்வொருவரோடும் மிகவும் நெருக்கமாக இருக்கிறார். உதாரணமாக, அஞ்ஞானியான ஒரு ராஜாவுக்கு ஒரு சொப்பனம் கொடுத்தார். தானி 12. தூங்கின ஒருவனுக்கு சொப்பனத்தைக் கொடுத்து, அவனோடு தான் நெருக்கமாக இருப்பதைத் தெரிவிப்பது சாதாரண விஷயமா! ஆனால் உலகின் மாபெரும் சாம்ராஜ்யங்கள் தம்முடைய கட்டுப்பாட்டில் இருப்பதையும், சகலத்தின் முடிவும் தமக்கு அத்துப்படி என்பதையும் அந்தச் சொப்பனத்தின்மூலம் தேவன் வெளிப்படுத்தினார். இந்த உண்மையிலிருந்து நாம் எத்தகைய ஆறுதலையும் நம்பிக்கையையும் பெறலாம்? அதேநேரம், உங்களுடைய எண்ணங்களை அறியுமளவிற்கு தேவன் உங்களோடு நெருக்கமாக இருப்பதை உணரும்போது எப்படி இருக்கிறது? இதன் அடிப்படையில், சிலுவையின் வாக்குறுதி எந்த அளவுக்கு முக்கியமாக இருக்கிறது?*

2 *பொதுத் தீர்க்கதரிசனத்திற்கும் அடையாளத்தீர்க்கதரிசனத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை வகுப்பில் கலந்தாலோசியுங்கள். இரண்டையும்பற்றி வேறு என்ன உதாரணங்கள் வேதாகமத்தில் உள்ளன?*